முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை - 2018 யூலை

## (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

(Financial Accounting Basics)

2018-07-28
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *விடைகள் உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருந்தால், அவற்றைத் தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQ's) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல்* ***வினைச் சொல்லைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் நிரலில் தரப்பட்டுள்ள* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பதினைந்து (15) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

***1.1*** *முதல்* ***1.8*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்க. உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கங்களை வினா ஒழுங்கில் (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றில் வியாபாரத்தின் நாட்டதாரர் (stakeholder) ஒருவராக இருக்கக்கூடியவர் யார்?

(1) உரிமையாளர்கள் (2) அரசாங்கம்

(3) கடன்கொடுத்தோர் (4) மேற்கூறிய யாவரும்

(02 புள்ளிகள்)

**1.2** கீழ்வருவனவற்றுள் வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பொருட்களைப் பதிவு செய்வதற்குக் களஞ்சியக் காப்பாளரால் பயன்படுத்தப்படும் மூல ஆவணமாக அமைவது எது?

(1) பொருட்கள் கோரும் சீட்டு (MRN). (2) கொள்வனவுக் கட்டளை (PO).

(3) பொருட்கள் பெறுகைச் சீட்டு (GRN). (4) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு (journal voucher)

(02 புள்ளிகள்)

**1.3** தனி உரிமையாளரான **பெரேரா**, தனது தனிப்பட்ட செலவுகளுக்காக அவரது வியாபாரத்திலிருந்து ரூ.5,000/- பணத்தினை எடுத்திருந்தார். இது வியாபாரத்தின் ஓர் எடுப்பனவாகக் கருத்தில் கொள்ளப்பட்டது. இதனுடன் தொடர்புபட்ட கணக்கீட்டுக் கோட்பாடு கீழ்வருவனவற்றுள் எது?

(1) உரிமக் (Entity) கோட்பாடு (2) அட்டுறு (Accrual) கோட்பாடு

(3) தேறுகைக் (Realization) கோட்பாடு (4) கொள்கை மாறாக் (Consistency) கோட்பாடு

(02 புள்ளிகள்)

**1.4** **சகான்** என்பவர் அலுவலகப் பாவனைக்காக 2018 ஏப்ரல் 01 இல் ரூ. 45,000/- பெறுமதியான அலுவலக அலுமாரியைத் **தனபால தளபாடக் கம்பனியிலிருந்து** கடனடிப்படையில் கொள்வனவு செய்தார்.

கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேற்கூறிய ஊடுசெயலினால் ஏற்படும் விளைவு :

(1) சொத்துக்களில் அதிகரிப்பும் பரிப்புக்களில் வீழ்ச்சியும்

(2) உரிமையாண்மையில் வீழ்ச்சியும் பரிப்புக்களில் வீழ்ச்சியும்

(3) சொத்துக்களில் அதிகரிப்பும் பரிப்புக்களில் அதிகரிப்பும்

(4) உரிமையாண்மையில் வீழ்ச்சியும் பரிப்புக்களில் அதிகரிப்பும் (02 புள்ளிகள்)

**1.5** கணக்குகளின் பாரம்பரிய வகைப்படுத்தலின்கீழ், பேரேட்டுக் கணக்குகளை மெய்க் கணக்குகள், தனிநபர்களின் கணக்குகள் மற்றும் பெயரளவிலான கணக்குகள் என வகைப்படுத்தலாம்.

கீழ்வருவனவற்றுள் மெய்க் கணக்கொன்றிற்கு (Real account) உதாரணமாக அமைவது எது?

(1) விற்பனைக் கணக்கு (2) சம்பளம் மற்றும் கூலிக் கணக்கு

(3) கட்டட பராமரிப்புக் கணக்கு (4) எந்திரக் கணக்கு (02 புள்ளிகள்)

**1.6** கீழ்வரும் தகவல்கள் 2018 மார்ச் 31 ஆந் திகதியிலான **நீலா மோட்டர்ஸ்** இன் எந்திரம் தொடர்பு பட்டதாகும் :

| | |
|---|---|
| எந்திரத்தின் கிரயம் | ரூ. 1,200,000/- |
| கொள்வனவுத் திகதி | 2016 ஏப்ரல் 01 |
| பெறுமானத் தேய்வு முறை | குறைந்துசெல்லும் மீதி முறை |
| வருடாந்த பெறுமானத் தேய்வு வீதம் | 20 % |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சரியான பெறுமானத் தேய்வுத் தொகை :

(1) ரூ. 240,000/-. (2) ரூ. 192,000/-. (3) ரூ. 153,000/-. (4) ரூ. 768,000/-.

(02 புள்ளிகள்)

**1.7** கீழ்வருவனவற்றுள் கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையை நோக்கி நகர்வதற்கான ஒரு காரணமாக அமைவது எது?

(1) பெருமளவான முதலீட்டுக் கிரயமொன்று சம்பந்தப்பட்டிருத்தல்

(2) முறைமையின் வேகம் மிகவும் உயர்வாக இருத்தல்

(3) மனித தவறுகள் காரணமாக சில செயலிழப்புகள் நிகழ்வதற்கான சாத்தியத்தன்மை காணப்படல்

(4) உயர் தொழில்நுட்பம் சார்பானதாக இருத்தல் (02 புள்ளிகள்)

**1.8** கீழ்வரும் ஊடுசெயல்களில் உரிமையாண்மையில் அதிகரிப்பு விளைவை ஏற்படுத்தும் ஊடுசெயல் எது?

(1) ரூ. 300,000/- பெறுமதியான குறுங்காலக் (short-term) கடனை வங்கியிடமிருந்து பெறல்

(2) வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவு ரூ. 150,000/-.

(3) அடுத்த ஆண்டிற்கான கட்டட வாடகை முற்பணமாக ரூ. 560,000/- பெறுவனவு

(4) உரிமையாளர், வியாபாரத்தில் ரூ. 150,000/- பெறுமதியான பணத்தினை உட்புகுத்தல்

(02 புள்ளிகள்)

***1.9* *முதல்* *1.15* *வரையான வினாக்களுக்கு உரிய விடைகளை, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குமுறையாக (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி, அந்த இலக்கங்களுக்கு எதிரே எழுதுக.***

**1.9** "பரிப்பு" (Liability) எனும் பதத்தை வரைவிலக்கணம் செய்க. (02 புள்ளிகள்)

**1.10** நிதிக் கணக்கீட்டின் நோக்கங்கள் இரண்டினைக் (02) குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**1.11** கீழ்வரும் தகவல்கள் **றோஸ் டிரேடர்ஸ்** இன் 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| விபரம் | ரூ. |
|---|---|
| மூலதனம் - 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி | 500,000 |
| 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் இலாபம் | 175,000 |
| பரிப்புக்கள் - 2018 மார்ச் 31 ஆந் திகதி | 425,000 |
| ஆண்டின்போது எடுப்பனவுகள் | 25,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில்,

**றோஸ் டிரேடர்ஸ்** இன் 2018 மார்ச் 31 ஆந் திகதியிலான மொத்தச் சொத்துக்களின் பெறுமதியைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.12** கீழ்வரும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான கணக்கீட்டுக் கோட்பாடுகளைக் கூறுக :

(a) ஒரு நிறுவனம் கலைத்தல் நிலைக்கு உள்ளாகும் வரையும் அது நீண்ட காலத்திற்குத் தொடரும் எனக் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

(b) காசு பெறப்பட்டாலோ அல்லது பெறப்படாது விட்டாலோ எதுவாகினும் குறிப்பிட்ட கணக்கீட்டுக் காலப்பகுதியில் வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

(c) ஒரு நிறுவனத்தினால் பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் பல வருடங்களுக்கும் மேலாக மாறாமல் பிரயோகிக்கப்படல் வேண்டும். (03 புள்ளிகள்)

**1.13** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் கூறுக.

(a) கணக்கீட்டுச் சமன்பாடானது சொத்துக்கள் + பரிப்புக்கள் = மூலதனம் எனக் குறிப்பிடப்படலாம்.

(b) ACCPAC என்பது பொதுக் கணக்கீட்டு மென்பொருள் பொதிக்கான ஓர் உதாரணமாகும்.

(c) நிதிநிலைக் கூற்றானது கணக்கீட்டின் ஓர் உள்ளீடாகும்.

(d) நிதிக் கணக்கீடானது வரலாற்றுத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்கின்றது. (04 புள்ளிகள்)

**1.14** **XYZ டிரேடர்ஸ்** இன் கீழ்வரும் ஊடுசெயல்கள் ஒவ்வொன்றையும் பதிவுசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் ''மூல ஆவணத்தினை'' இனங்காண்க :

(a) ரூ. 15,000/- பெறுமதியான எழுதுகருவி பொருட்கள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.

(b) கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ.400,000/- பெறுமதியான பொருட்கள் அவற்றில் காணப்பட்ட தரக்குறைவு காரணமாக வழங்குநருக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

(c) **வரையறுக்கப்பட்ட ABC** நிறுவனத்திற்கு ரூ.20,000/- பெறுமதியான பொருட்கள் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன.

(d) ரூ. 400,000/- பெறுமதியான போட்டோபிரதி இயந்திரம் அலுவலகப் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட PQRS நிறுவனத்திடமிருந்து** கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது.

(04 புள்ளிகள்)

**1.15** **ஜனித்** என்பவர் **ஜனித் டிரேடர்ஸின்** தனியுடைமையாளர் ஆவார். **ஜனித் டிரேடர்ஸின்** கீழ்வரும் ஊடுசெயல்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான இரட்டைப் பதிவுகளை எழுதுக :

(a) அலுவலகப் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட AM (தனியார்) நிறுவனத்திடமிருந்து** ரூ.1,000,000/- பெறுமதியான மோட்டார் வாகனத்தை கடனடிப்படையில் கொள்வனவு செய்தல்

(b) உரிமையாளர் தனது தனிப்பட்ட தேவைக்காக ரூ. 12,000/- பெறுமதியான பொருட்களை எடுத்துக் கொள்ளல்

(c) **ஜனித்திடமிருந்து** கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 40,000/- பெறுமதியான பொருட்கள், சேதமடைந்திருந்ததன் காரணமாக **மாலிக்** எனும் கடன்பட்டோரால் திருப்பி அனுப்பப்படல்

(06 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் அலுமினிய அலுமாரி (Aluminum cupboard) உற்பத்தியாளரான **றோயல் டிரேடர்ஸின்** 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப் பட்டன:

| | **ரூ.** |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | 10,500,000 |
| மூலப்பொருளுக்கான உள்வந்த வண்டிக்கூலி | 1,500,000 |
| நேர் கூலி - உற்பத்திப் பணியாளர்கள் | 3,000,000 |
| ஏனைய நேர் செலவுகள் | 5,000,000 |
| கட்டடக் காப்புறுதி | 500,000 |
| தொழிற்சாலை இயந்திரத்தின் மீதான காப்புறுதி | 350,000 |
| கட்டட மின்சாரம் | 1,500,000 |
| தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் | 1,100,000 |
| தொழிற்சாலை இயந்திரப் பெறுமானத் தேய்வு | 300,000 |
| **தொக்குகள் - 2017 ஏப்ரல் 01 இல்:** | |
| மூலப்பொருட்கள் | 5,600,000 |
| புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 2,200,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2018 மார்ச் 31 ஆந் திகதியிலான இறுதித் தொக்குகள் பின்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| மூலப்பொருட்கள் | 4,900,000 |
| புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 3,100,000 |

(2) கட்டடத்துடன் தொடர்புடைய செலவுகள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும் :

| | |
|---|---|
| தொழிற்சாலை | 80% |
| அலுவலகம் | 20% |

(3) உற்பத்திசெய்யப்படும் ஒவ்வொரு அலுமினிய அலுமாரிக்கும் ரூ. 500/- மேலதிகப் படிக்கு (additional allowance) தொழிற்சாலைப் பணியாளர்கள் உரித்துடையவர்கள் ஆவர். 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட அலுமாரிகளின் எண்ணிக்கை 1,000 ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **றோயல் டிரேடர்ஸின்** உற்பத்திக் கணக்கினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 03

**செஹான்** ரூ. 2,200,000/- காசினை முதலீடு செய்து 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி **செஹான் டிரேடர்ஸ்** என்ற தனியுடமை வியாபாரத்தை ஆரம்பித்தார்.

2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பெறுவனவு நாளேடு மற்றும் காசுக் கொடுப்பனவு நாளேடு (காசேடு) ஆகியவற்றின் தொகுப்பு கீழ்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| காசுப் பெறுவனவு நாளேடு (பெறுவனவுகள்): | |
| **செஹான்** உள்ளிட்ட மூலதனம் | 2,200,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து பெறுவனவு | 2,300,000 |
| காசுக் கொடுப்பனவு நாளேடு (கொடுப்பனவுகள்) : | |
| மின்சாரக் கட்டணம் | 150,000 |
| சம்பளங்கள் | 450,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு | 700,000 |
| 2017 அக்டோபர் 01 இல் வாகனக் கொள்வனவு | 2,000,000 |
| எடுப்பனவுகள் | 400,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) சகல விற்பனைகளும் கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

(2) முகாமையானது வாகனத்திற்கான பெறுமானத் தேய்வை நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் 10% தேய்மானம் செய்யத் தீர்மானித்தது.

(3) கீழ்வரும் செலவுகள் 2018 மார்ச் 31 இல் அட்டுறு செய்யப்படல் வேண்டும் :

| | ரூ. |
|---|---|
| சம்பளம் | 50,000 |
| மின்சாரக் கட்டணம் | 15,000 |

(4) 2018 மார்ச் 31 இல் **செஹான் டிரேடர்ஸின்** கணக்கேடுகளில் பின்வரும் மீதிகள் காணப்பட்டன :

| | **ரூ.** |
|---|---|
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 800,000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 900,000 |

(5) 2018 மார்ச் 31 இல் எவ்வித இருப்புகளும் (stocks) காணப்படவில்லை.

***நீங்கள் செய்யவேண்டியது :***

2018 மார்ச் 31 ஆந் திகதியில் **செஹான் டிரேடர்ஸின்** பரீட்சை மீதியினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

2018 மார்ச் 31 ஆந் திகதியில் **Q & Q கம்பனியின்** உதவிக் கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. ஏற்பட்ட வித்தியாசமானது தொங்கற் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டு வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிக் கூற்றுக்களின்படி இலாபமாக ரூ. 748,000/- காட்டப்பட்டிருந்தது.

பின்னர் கீழ்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன :

(1) கடன்கொடுத்தோரிடமிருந்தான ரூ. 600,000/- பெறுமதியான கொள்வனவுகள் கணக்கேடுகளிலிருந்து முழுமையாக விடுபட்டுள்ளது.

(2) ரூ. 25,000/- பெறுமதியான எழுதுகருவி செலவினமானது, எழுதுகருவிக் கணக்கில் ரூ. 52,000/- ஆக எடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் இது காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(3) **சரத்** எனும் கடன்கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்ட ரூ. 355,000/- ஆனது தவறுதலாக ரூ.553,000/- ஆக கடன் கொடுத்தோர் கணக்கில் பதியப்பட்டிருந்தது. ஆயினும் இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(4) ரூ. 350,000/- பெறுமதியான மடிக் கணினியொன்றின் கொள்வனவு, கணினி பராமரிப்புக் கணக்கில் பதியப்பட்டிருந்தது. இது காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(5) வாடகை வருமானம் ரூ. 50,000/- ஆனது தவறுதலாக வாடகைச் செலவுக் கணக்கில் ரூ. 5,000/- ஆக வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்தபோதிலும் அது காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(6) ரூ. 33,000/- கடன் விற்பனையானது வியாபார கடன்பட்டோர் கணக்கு மற்றும் விற்பனைக் கணக்கு ஆகிய இரண்டிலும் இரு தடவைகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **Q & Q கம்பனியின்** 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான செம்மையாக்கப்பட்ட இலாபம் / (நட்டத்தினைக்) **கணிக்குக.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) 2018 சனவரி மாதத்திற்கான கீழே தரப்பட்டுள்ள ஊடுசெயல்கள் **மல்டி டிரேடர்ஸ்** தனியுடமை நிறுவனத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| திகதி | ஊடுசெயல் |
|---|---|
| 2018.01.05 | ரூ. 150,000/- கிரயமான இருப்புகள் ரூ. 170,000/- க்கு **ரத்னா டிரேடர்ஸிக்கு** கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன. |
| 2018.01.20 | **ரத்னா டிரேடர்ஸிடமிருந்து** ரூ. 100,000/- காசாகப் பெறப்பட்டது. |
| 2018.01.22 | மீள் விற்பனைக்காக ரூ. 200,000/- பெறுமதியான பொருட்கள் காசு மூலம் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 2018.01.27 | உரிமையாளர் மேலதிக மூலதனமாக ரூ. 1,000,000/- இனைக் காசாக முதலீடு செய்தார். |
| 2018.01.31 | சனவரி மாதத்திற்கான ஊழியர் (staff) சம்பளம் ரூ. 125,000/- செலுத்தப்பட்டது. |

**நீங்கள் செய்யவேண்டியது :**

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஊடுசெயல்களின் தாக்கத்தினையும் **பதிவுசெய்க.**

(தொக்கு + கடன்பட்டோர் + காசு = உரிமையாண்மை + பரிப்புக்கள்)

(05 புள்ளிகள்)

(B) **ருவான் சஹால்** ஒரு அரிசி மொத்த வியாபாரியாவார். கீழ்வரும் தகவல்களானவை **ருவான் சஹாலின்** 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த மாதத்திற்கான ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| திகதி | மூல ஆவணம் | விபரம் | உருப்படி விபரம் | | |
|---|---|---|---|---|---|
| | | | பெயர் | கணியம் (கிலோ கிராம்) | கிலோகிராம் ஒன்றின் விலை (ரூ.) |
| 2018.03.01 | பட்டியல் இல.109 | **AB டிரேடர்ஸிடமிருந்தான** கடன் கொள்வனவு | வெள்ளை அரிசி | 1,500 | 70 |
| 2018.03.10 | பட்டியல் இல.231 | **ஆனந் டிரேடர்ஸிடமிருந்தான** கடன் கொள்வனவு | சிவப்பு அரிசி | 2,000 | 60 |
| 2018.03.25 | பட்டியல் இல.352 | **ரவி அன்ட் சன்ஸ் இடமிருந்தான** கடன் கொள்வனவு | பாசுமதி அரிசி | 1,200 | 90 |
| 2018.03.26 | வரவுத் தாள் இல. 35 | **ஆனந் டிரேடர்ஸிற்கான** வெளித்திரும்பல்கள் | சிவப்பு அரிசி | 200 | - |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2018 மார்ச் மாதத்திற்கான **ருவான் சஹால்** இன் பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) கொள்வனவு நாட்குறிப்பு (கொள்வனவு நாளேடு)

(b) வெளித்திரும்பல் நாட்குறிப்பு (கொள்வனவுத் திரும்பல் நாளேடு) (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**ஸ்மார்ட் டயல்** என்பது கையடக்கத் தொலைபேசி மற்றும் பாகங்களை விற்பனை செய்யும் ஒரு தனியுடமையாளர் வியாபாரம் ஆகும். 2018 மார்ச் 31 இல் **ஸ்மார்ட் டயலின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**ஸ்மார்ட் டயல்**

**2018 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்): | | |
| காணி | 4,000 | |
| கட்டடம் | 3,000 | |
| கணினிகள் | 1,200 | |
| அலுவலக உபகரணம் | 800 | |
| திரள் தேய்மானம் - 2017 ஏப்ரல் 01 இல்: | | |
| கட்டடம் | | 1,000 |
| கணினிகள் | | 480 |
| அலுவலக உபகரணம் | | 320 |
| விற்பனைகள் | | 10,900 |
| கொள்வனவுகள் | 8,500 | |
| இருப்பு – 2017 ஏப்ரல் 01 இல் | 1,500 | |
| வியாபார வருமதிகள் | 2,200 | |
| வியாபார சென்மதிகள் | | 3,800 |
| ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு – 2017 ஏப்ரல் 01 இல் | | 200 |
| நிலையான வைப்பு (6 மாதங்கள்) | 1,500 | |
| வட்டி வருமானம் | | 100 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 100 | |
| மின்சாரம் | 1,200 | |
| செலுத்தப்பட்ட காட்சியறை (Showroom) கட்டட வாடகை | 600 | |
| கையிலுள்ள காசு | 1,000 | |
| வங்கி மேலதிகப்பற்று | | 2,200 |
| ஊழியர்களுக்கான சம்பளம் | 1,800 | |
| விற்பனைப் பணிசை (தரகு) | 500 | |
| 2017 ஏப்ரல் 01 இல் மூலதனம் | | 8,900 |
| | **27,900** | **27,900** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2018 மார்ச் 31 இல் மதிப்பிடப்பட்ட இறுதி இருப்பின் பெறுமதி ரூ. 3,500,000/-.

(2) வியாபாரத்தின் கொள்கையானது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தின்மீது கீழ்வரும் வீதங்களில் தேய்மானம் செய்வதாகும் :

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 5 % |
| கணினிகள் | : | 20 % |
| அலுவலக உபகரணம் | : | 10 % |

(3) காட்சியறைக் கட்டட வாடகைக் கட்டணம் ரூ. 600,000/- ஆனது 2018 சனவரி 01 ஆந் திகதியில் இருந்து 2018 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காகச் செலுத்தப்பட்டது.

(4) வியாபார வருமதிகள் மீதியிலிருந்து ரூ. 30,000/- ஐ பதிவழிப்பதற்கு முகாமையால் தீர்மானிக்கப் பட்டதுடன் 2018 மார்ச் 31 ஆந் திகதி நிலுவையிலிருந்த வியாபார வருமதி மீதிகள் தொடர்பில் ஐயக் கடனுக்கான பொது ஏற்பாட்டை 10 % ஆக மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(5) 2018 மார்ச் மாதத்திற்காகச் செலுத்தவேண்டிய விற்பனைப் பணிசை (தரகு) ரூ.100,000/- ஆகும்.

(6) நிலையான வைப்பின் மீதான வட்டியானது வட்டி வருமானக் கணக்கில் சரியாகப் பதியப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (11 புள்ளிகள்)

(b) 2018 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்று (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி *C* முடிவு

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |